DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 256/2024 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| Name | : | **சிவா** |
| Father's Name | : | **குருநாதன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 1, 6 மற்றும் 9 ஆஜர். எதிரிகள் 2, 3, 4, 5, 7, 8, 10 மற்றும் 11 ஆஜர் இல்லை. எதிரிகள் 2, 3, 4, 5, 7, 8, 10 மற்றும் 11 தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 09.04.2026

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது கல்லுப்பட்டியில் குடியிருந்து டாக்சி டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சிகள் முத்துராஜா, முத்துப்பாண்டி, ராஜராம் ஆகியோர்களை தெரியும் அனைவரும் எனது உறவுக்காரர்கள். சாட்சி முருகன் எனது அண்ணன் ஆவார். கடந்த 01.11.2019 ம் தேதி நானும் எனது அண்ணன் முருகன் என்பவரும் மானாமதுரையில் உள்ள எனது அக்கா வீட்டிற்கு செல்வதற்காக இருசக்கரவாகனத்தில் சென்றுகொண்டிருந்தோம். அன்று காலை

9.45 மணியளவில் உருளி விலக்கிற்கும் காட்டுரணிக்கும் இடையே உள்ள இடத்தில் நாங்கள் வந்துகொண்டிருந்தபோது அந்த இடத்தில் 10, 15 நபர்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள்.

2. மேலும் அந்த இடத்தில் சத்தம் கேட்டது. நானும் எனது அண்ணனும் போய் பார்த்தபோது ராஜாராம் மற்றும் முத்துப்பாண்டி ஆகியோர் வெட்டுக்காயங்களுடன் இருந்தார்கள். அப்போது அவர்களை வெட்டிய எதிரிகள் முத்துப்பாண்டி, அழகுசுந்தரம், பாண்டி, செல்லம், பாலமுருகன், அங்குவிஜயன், வைரமணி, முத்துச்சாமி ஆகியோர்கள் அந்த இடத்திலிருந்து பொலிரோ வாகனத்தில் சென்றார்கள். முத்துராஜாவுக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. முத்துப்பாண்டிக்கு நெஞ்சிலும், உடம்பு முழுவதும் காயங்கள் இருந்தது. ராஜாராமிற்கு தலை, கை மற்றும் உடம்பு முழுவதும் காயங்கள் இருந்தது. நான் காயங்கள் குறித்து முத்துராஜாவிடம் கேட்டபோது தானும், முத்துப்பாண்டி மற்றும் ராஜாராமுடன் இருசக்கரவாகனத்தில் சென்று கொண்டிருந்த போது எதிரிகள் பொலிரோ வாகனத்தில் வந்து மோதி கீழே தள்ளி தங்களை வெட்டியதாக சொன்னார்.

3. மேலும் இருசக்கரவாகனத்தில் அந்த சமயத்தில் ஏலம்மாள் மற்றும் முத்துராணி ஆகியோரும் வந்ததாக சொன்னார். அதன்பிறகு நான் 108 ஆம்புலன்சிற்கு போன் மூலமாக தகவல் தெரிவித்து காயம்பட்ட மூவரையும் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தேன். அதன்பிறகு மேல் சிகிச்சைக்கு மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன்பிறகு மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு காயம்பட்ட மூவரும் சிகிச்சைக்கு சென்றார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. உருளி விலக்கிற்கும் காட்டு ஊரணி செல்லும் ரோடு சிவகங்கை - மானாமதுரை செல்லும் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். அ.சா.2 முத்துப்பாண்டி எனது தாய்மாமா என்றால் சரிதான். என் மீது சிப்காட் காவல்நிலையத்தில் வழக்கு தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை. போலிசார்

விசாரணையில் "எங்கள் மீது" சிப்காட் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தேசிய நெடுஞ்சாலை என்பதால் ஆள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். நான் போகும்போது போலிசார் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை.

2. எவ்வளவு நேரம் கழித்து போலிசார் வந்தார்கள் என்றால் சுமார் 20 நிமிடம் கழித்து வந்தார்கள். சம்பவயிடத்தில் எத்தனை பொது நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 10 நபர்கள் இருந்தார்கள். போலிசாருக்கு யார் தகவல் கொடுத்தது என்றால் தெரியவில்லை. நான் இருக்கும்போது போலிசார் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் நான் இருக்கும் போது போலிசார் வந்துவிட்டார்கள் என்ற விபரத்தை விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 108 ஆம்புலன்சில் நான் உடன் சென்றேன் என்றால் சரிதான். காயம்பட்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது முத்துராஜா சொல்லித்தான் தெரியும். நான் சென்று பார்த்தபோது அ.சா.1 முதல் 3 சென்ற இருசக்கரவாகனம் எந்த திசையில் கிடந்தது என்றால் சிவகங்கை - மானாமதுரை செல்லும் ரோட்டிற்கு இடதுபுறமாக கிடந்தது.

3. நான் பார்க்கும் போது இருசக்கரவாகனம் சேதமாகியிருந்ததா என்றால் பின்னால் மட்டும் சேதமாகி இருந்தது. அ.சா.1 முத்துராஜா எனக்கு என்ன உறவு முறை என்றால் துாரத்து சொந்தம். அ.சா.3 ராஜாராம் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அத்தை மகளை திருமணம் செய்துள்ளார். அ.சா.1 முதல் 3 வரையானவர்கள் மீது ஏற்கனவே சிப்காட், மானாமதுரை மற்றும் சிவகங்கை தாலுகா காவல்நிலையத்திலும் வழக்கு நிலுவையில் இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியும். சிவகங்கை தாலுகா காவல்நிலையத்திலும் வழக்கு நிலுவையில் இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொன்னது போல் சொன்ன நாள், தேதியில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

நான் காயம்பட்ட நபர்களுக்கு உறவுக்காரர் என்பதால் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.09 15:55:03 +05'30'

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**